**24.06.2025** **அசல் வழக்கு எண்.37/2014** **Starting Time : 02.52 p.m.**

**பி.வா.சா.1** **திரு. முருகன் செட்டி த/பெ. சுப்பிரமணி செட்டி**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

ஏற்கனவே நான் கூறியது போல் தாவா சொத்திற்கு நான்கு பக்கத்திலும் 1ஆம் வாதியின் சொத்து ஏதும் இல்லை என்று கூறியுள்ளது உண்மையா அல்லது நான் தாக்கல் செய்துள்ள என் பெயரில் உள்ள கிரய ஆவணத்தில் (பி.வா.சா.ஆ.4) சொத்து விவரத்தில் 1ஆம் வாதி முத்தியாலு சொத்திற்கு மேற்கு என்று கூறியிருப்பது உண்மையா என்றால் நான்கு பக்கத்திலும் 1ஆம் வாதியின் சொத்து இல்லை என்பது தான் உண்மை. ஆவணத்தில் அவ்வாறு கூறியிருந்தால் அது தவறு. அதனால் மேற்படி கிரய ஆவணத்தின்படி நான் ஏதும் உரிமை கோர இயலாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் தாவா சொத்தில் 12 சென்ட் டி.சி.லேண்ட் என்பதை பற்றி கூறி பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் 1ஆம் வாதி மேற்படி 12 சென்ட் பட்டா நிலம் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறு. அது டி.சி.லேண்ட் தான். மேற்படி 12 சென்ட் டி.சி.லேண்ட் என்பதற்கு என் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 12 சென்ட் 1ஆம் வாதி கிரயம் பெற்ற சொத்து என்றும், அதனை அவர் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி நிலம் டி.சி.லேண்ட் ஆகும். டி.சி. லேண்ட் என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக ஒதுக்கப்படும் சொத்து என்றால் மேற்படி 12 சென்ட் எங்கள் சமுதாயத்திற்காக ஒதுக்கப்பட்ட சொத்து. மேற்படி 12 சென்ட் டி.சி.லேண்ட் என குறிப்பிட்டு எங்களுக்காக ஒதுக்கியதற்கு அரசாங்கத்தில் இருந்து ஏதேனும் ஆவணம் கொடுத்தார்களா, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி டி.சி.லேண்ட் குறித்து ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும் உரிமையே இல்லாத சொத்திற்கு உரிமை கொண்டாடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் சொத்து விவரத்தில் ஏரி வாய்க்காலுக்கு 1ஆம் வாதியின் சர்வே எண்.58/1பி நிலத்திற்கும் வடக்கு, சர்வே எண்.61 நிலத்திற்கு கிழக்கு, சர்வே எண்.58/1எ-ல் மீதி (1ஆம் வாதியின்) நிலத்திற்கு தெற்கு மேற்கு என்று குறிப்பிட்டுள்ள ஜக்பந்திக்கு மத்தியில் உள்ள நிலத்தில் நான் ஏதேனும் அனுபவத்தில் உள்ளேனா என்றால் நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன். ஆனால் ஜக்பந்தி தவறானது ஆகும். நான் அனுபவித்து வரும் சொத்திற்கு மேற்கு தனபால் இடம், தெற்கு

பக்கம் 1ஆம் வாதியின் இடம், கிழக்கு பக்கம் எனது இடமும், வடக்கு பக்கம் தனபால் இடம் இதன் மத்தியில் 90 சென்ட் நிலம் சர்வே எண்.58/1எ-ல் நான் அனுபவித்து வரும் நிலம் ஆகும். அது டி.சி. லேண்ட் ஆகும். நான் கிரயம் பெற்றதாக சொல்லும் 78 1/2 சென்ட்டும் டி.சி. லேண்ட் தான் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் பட்டா நிலம் என்றும், அதை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், உரிமை இல்லாத சொத்திற்கு உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கான காரணம் நான் கிரயம் பெற்ற 78 1/2 சென்ட்டிற்கு அதிகமாகவே எனக்கு வருவாய் துறையில் இருந்து பட்டா வழங்கப்பட்டதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் அதிகமான விஸ்தீரணத்திற்காக பட்டா பெற்றது நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் நான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பெயரில் உள்ள பட்டாவை வாதிகள் தரப்பில் சான்றாவணமாக (வா.த.சா.ஆ.7) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். (வா.த.சா.ஆ.7ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது). தாவா சொத்துக்களில் எனக்கு உரிமையில்லாமல் பொய்யாக உரிமை கொண்டாடுகிறேன் என்றும், நான் கிரயம் பெற்ற விஸ்தீரணத்திற்கு அதிகமாக பட்டா வழங்கப்பட்டதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற 78 1/2 சென்ட்டுக்கு மட்டும் தான் உரிமை கொண்டாட முடியும் என்று சொன்னால் அது தவறு. மேற்படி நான் கிரயம் பெற்ற 78 1/2 சென்ட் எனக்கு சொந்தமானது ஆகும். மீதி 11 1/2 சென்ட் வரத செட்டி பெயரில் உள்ளதால் நான் தான் அனுபவத்தில் உள்ளேன். வரதப்ப செட்டி தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் ஆம். மேற்படி வரதப்ப செட்டியை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் சொல்வதுபோல் மேற்படி தாவா சொத்துக்கள் டி.சி. லேண்ட் அல்ல என்றும், நான் கிரயம் பெற்ற சொத்திற்கு அதிகமாக பட்டா கொடுக்கப்பட்டதால், மேற்படி பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் நான் கிரயம் பெற்ற சொத்திற்கு அதிகமாக பட்டா கொடுக்கப்பட்டது செல்லாது என்றும், நான் பெற்ற பட்டாவுடன் வாதிகள், 1,3 மற்றும் பிரதிவாதிகளின் பெயரையும் சேர்த்து பட்டா வழங்கவேண்டும் என்று சொன்னால்

சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்றுள்ள ஆவணத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாசில்தாரிடமும் ஆவணத்தை பெற்றேன் அதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ஆவணம் கிராம நிர்வாக அலுவலரிடம் வாங்கியதால் செல்லாது என்று சொன்னால் நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்து மேற்படி ஆவணத்தை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதனால் நான் தாக்கல் செய்த ஆவணம் செல்லுபடியாகும். வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**Ending time : 03.28 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.